# 1 இயற்கையில் இறைவனைக் காண்போம்

மனிதன் இவ்வுலகில் தோன்றிய காலம் தொட்டு அவன் இயற்கைக்கும், இறைவனுக்கும் இடையிலான மிக நெருங்கிய தொடர்பினை உணர்ந்தவனாகவே வாழ்ந்து வருகின்றான். தான் வாழ்ந்து வரும் இயற்கை அவனுக்கு நன்மை செய்வதாகவும் வியப்பினை அளிப்பதாகவும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டது. சூறாவளி, வெள்ளப்பெருக்கு, பூகம்பம், எரிமலை, கடல் கோள், காட்டுத்தீ போன்றவற்றை இயற்கையின் சீற்றங்கள் என நம்பினான்.



பகல் இரவு மாறி மாறித் தோன்றுவதும் மலைகள் பெருமளவு ஒரே மாதிரியிருப்பதும், ஆறுகள் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருப்பதும், மரங்கள், செடி, கொடிகள், பயிர் வகைகள் முதலியன குறிப்பிட்ட காலப்பகுதியிலே தோன்றி வளர்ந்து, மலர்ந்து, காய்த்து, கனிந்து பின் உலர்ந்து போவதும் இறைவனின் செயலாகும் என நம்பினான். இவை போலவே மனிதனும் பிற உயிர்களும் குறிப்பிட்ட காலப்பகுதிகளிலே வாழ்ந்து மறைவதும் இறைவனின் செயலாகும். அவை இறைவனுக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குகின்றன.

ஆதி கால மனிதன் இயற்கையின் ஆற்றலையும், அது தரும் பயன்களையும், அது ஏற்படுத்தும் அழிவையும் கண்டு, வியப்புற்று அதனைத் தெய்வமாக வழிபட்டான். இதற்கு எடுத்துக் காட்டாக இருக்கு வேதகால மக்கள் இயற்கை அம்சங்களைத் தெய்வங்களாக வழிபட்டமையை அக்காலப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. இங்கு தெய்வத்தைக் குறிக்கும் ''தேவ'' எனும் சொல் 'ஒளியுள்ள பொருள்' எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இங்கு போற்றப்படும் பல தெய்வங்கள் இயற்கை அம்சங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றுள், அக்கினி (தீ), சூரியன் (தூண்டுபவன்), ஆபஸ் (நீர்), மருதஸ் (காற்று) முதலான இயற்கை அம்சங்களில் இறைவனைக் கண்டான்.

இறைவனும் இயற்கையும் என்பதில், இறைவன் ஒளிமயமானவன் அவனால் படைக்கப்பட்ட இயற்கையும் ஒளிமயமானது, ஒளியுள்ள இயற்கை அம்சங்களைத் தெய்வமாகக் கொள்ளும் வழிபாட்டு மரபு மனிதனிடத்தே வளர்ச்சியடைந்தது.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

அதனால் ஒளியைத் தரும் உருவங்களை இறைவனாக நினைத்து வழிபட்டான். ஒளியானது, அறிவு, ஞானம் என்பவற்றைக் குறிக்கும். இருள், அறிவின்மை, அஞ்ஞானம் என்பவற்றை குறிப்பதினூடாக இறைவனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்புகளை அறிந்து கொள்ளலாம்.

மனிதன் இயற்கை அம்சங்களை வணங்குவதுடன் நின்றுவிடாது சிந்திக்கவும் தொடங்கினான். இயற்கைக்கு அப்பாலிருந்து யாவற்றையும் கட்டுப்படுத்தி இயக்கும் பரம்பொருள் ஒருவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டான். காலப்போக்கில் எல்லாத் தெய்வங்களும் ஒரே இறைவனின் அம்சங்கள் என்பதை உணர்ந்து வழிபடத் தொடங்கினான்.

இறைவன் இயற்கையின் பல்வேறு வடிவங்களிலும் உறைந்துள்ளான். இறைவன் அட்டமூர்த்திகளாக (ஐம்பூதங்கள், சூரியன், சந்திரன், இயமானன் (ஆன்மா) விளங்குகிறான். எல்லாவற்றையும் கடந்தவர் கடவுள் எனும் கருத்தும் காணப்பட்டது. இயற்கையில் வாழ்ந்து வந்த மனிதன் இயற்கைக்கு அப்பாலும் இயற்கையூடாகவும் இறைவனைக் காண முற்பட்டான். அவ்விறைவனுக்கு உருவமளித்தும் உருவமற்ற அருவமாகவும், அருவுருவமாகவும் வழிபட்டான்.

தெய்வங்களுக்கு இயற்கையாகக் காணப்படும் மரங்களும் மலர்களும் உள்ளன. சிவபிரான் கல்லால மரத்தின் கீழிருந்து உபதேசம் செய்தமையும் கொன்றை, வில்வம், துளசி, வேம்பு போன்ற மலர்களும் மரங்களும் பிரியமானவைகளாகவும் காணப்படுகின்றன. அதனால்தான் சிவன் ‘‘ஆலமர் செல்வன்’’ எனவும் போற்றப்படுகின்றான்.

நாயன்மார் பலரும் இறைவனை இயற்கையோடு இணைத்துப் பாடியுள்ளனர். சம்பந்தர் இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபட்டார். அவரது பாடல்கள் பலவும் இறைவனை இயற்கையோடு இணைத்துப் பாடப்பட்டவை அதற்கு உதாரணமாக பின்வரும் பாடலடிகளை நோக்குவோம்.

**‘‘மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்தவதனால்’’**
எனவும்
**‘‘நீர் பரந்த நிமிர்புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி’’**
எனவும்
**‘‘பிள்ளைப் பிறையும் புனலும் சூடும் பெம்மான்’’**
எனவும்

இயற்கையோடு இறைவனையும் இணைத்துப் பாடியுள்ளார்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

இறைவனிடம் மிகுந்த அன்பும், பக்தியும் கொண்டவர் திருநாவுக்கரசர். அவர் தனது திருப்பாடல்களில் இறைவனை இயற்கையோடு இணைத்துப் பாடியுள்ளமையைக் காணலாம். உதாரணமாக பின்வரும் பாடலடிகளைக் குறிப்பிடலாம்.

**''விண்ணாகி நிலனாகி விசும்பாகி''** எனவும்
**''எல்லா உலகமுமானாய் நீயே''** எனவும்
**''மண்ணாகி விண்ணாகி உயிருமாய் ''** எனவும்
**''கல்லால் அமர்ந்தாய் நீயே''** எனவும்
**''ஆல நிழலின் மேவினானடிக் கன்பர் துன்பிலரே..''** எனவும்

போன்றவரிகள் மூலம் திருநாவுக்கரசர் எங்கும், எப்போதும் எல்லாவற்றிலும் இறைவனைக் காண்கிறார். எல்லாம் சிவமயமாகவே அவருக்கு காட்சியளிக்கின்றன.

சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருப்பாடல்களில் இயற்கை அம்சங்களை இணைத்துப் பாடியுள்ளார் என்பதை பின்வரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

**''பித்தா பிறைசூடி'' எனவும்**
**''மருவார் கொன்றை மதிசூடி''** எனவும் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் இறைவன் ஐம்பூதங்களாகவும், அட்டமூர்த்திகளாகவும் விளங்குபவன் என்ற கருத்தினை பின்வரும் பாடலடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

**''பூதங்கள் ஐந்தாகிப் புலனாகி பொருளாகி**
**பேதங்கள் அனைத்துமாய் பேதமிலாப் பெம்மானை''** எனவும்,
**''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்''** எனவும்,
**''பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே''** எனவும்,
**''சோதியே சுடரே சுடரொளி விளக்கே''** எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபடும் வழக்கம் ஆரம்ப காலத்தில் இருந்தே வந்துள்ளதைக் காண முடிகிறது. மூர்த்தி, தலம் தீர்த்த வழிபாடு, நவக்கிரக வழிபாடு, பஞ்சபூதங்கள் தலங்கள் மரவழிபாடு, நீர் வழிபாடு, மலை வழிபாடு, அக்கினி வழிபாடு போன்றவை இயற்கையில் இறைவனை நினைவூட்டுவதாக அமைகிறது. எனவேதான் இயற்கைக்கு மதிப்பளித்து இயற்கையை வழிபடல் வேண்டும். இயற்கையே மனிதனின் பல்வேறு வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது. எனவே இயற்கையைப் போற்றி இறைவனை வணங்குவோம்.

## ॐ பாடச்சுருக்கம்

- மனிதன் தோன்றிய காலம் முதலே அவன் இயற்கைக்கும், இறைவனுக்கும் மிக நெருங்கிய தொடர்பினைக் காண்கிறான்.
- இருக்கு வேதப்பாடல்களில் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர்.
- ஒளியைத் தரும் பொருள்களை எல்லாம் இறைவனாக நினைத்து வழிபட்டனர்.
- இறைவன் இயற்கையில் அட்டமூர்த்தங்களாக விளங்குகிறான்.
- தெய்வத்திருவுருவங்கள் அனைத்தும் இயற்கை அம்சங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றன.
- தெய்வங்களுக்கு மரங்கள், மலர்கள், மந்திரங்கள் பிரியமானவையாகும்.
- நாயன்மார்கள் பலரும் இயற்கையோடு இறைவனை இணைத்துப் பாடியுள்ளனர்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. மனிதன் இயற்கையை வழிபட வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிடுக
2. மனித வாழ்க்கையுடன் இயற்கை எவ்வாறு தொடர்புபடுகிறது?
3. நாயன்மார் பாடல்களில் இயற்கை எவ்வாறு போற்றப்படுகின்றது?
4. தெய்வத்திருவுவங்களில் எவ்வகை இயற்கை அம்சங்கள் காணப்படுகின்றன.
5. மக்கள் இயற்கையைப் போற்றி வழிபட உங்களால் செய்ய முடியுமான செயற்பாடுகளை எழுதுக.

## செயற்பாடு

- ♦ நாயன்மார்கள் இயற்கையில் இறைவனைக் கண்டு வழிபட்டனர் என்பதனை விளக்கும் பாடல்களைத் தேடிக் காட்சிப்படுத்துக.
- ♦ ‘‘இயற்கையில் இறைவன் உறைந்துள்ளான்’’ எனும் தலைப்பில் 5 நிமிடப் பேச்சொன்றைத் தயாரித்துப் பேசிக் காட்டுக.


இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக